முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 15—2—57 வெள்ளி | ஒலி 45

இந்த 'சக்தி' நமக்கு உண்டு!

வல்லாட்சி சாய்ப்போம்!

தி.மு. கழகத்தின்

அன்பர்களே!

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி ஏழு ஆண்டுகள் கழிந்த பிறகு, எட்டாவது ஆண்டு நடப்பில் முதன் முறையாகப் பொதுத் தேர்தலில் ஈடுபடுகிறது. இது கழகத்தின் வரலாற்றில் மட்டுமின்றி, நாட்டின் அரசியல் வரலாற்றிலும் ஒரு முக்கியமான கட்டமாகும். கடந்த ஒன்பதாண்டு காலமாக ஆட்சியில் அமர்ந்துள்ள காங்கிரஸ் கட்சி, சட்டசபையிலும் மக்கள் சபையிலும் ஒரு வலுவான எதிர்க்கட்சி அமைந்து, செயல்பட முடியாதவாறு தன்னிடம் கிடைத்துள்ள அதிகாரத்தின் துணை கொண்டு, மெய்யான ஜனநாயக ஆட்சி ஏற்படவொட்டாமல் தடுத்து, எதேச்சாதிகாரமாக ஆண்டு வருகிறது. திராவிடத்தின் விடுதலை வேண்டி நிற்கும் கழகம், தேர்தலில் ஈடுபட்டு முழுப் பலன் காண முடியாது என்ற கருத்தில் நடந்த தேர்தல்கள் அனைத்திலும் நேரிடைப் பங்கு கொள்ளாமலே இருந்து வந்தது. இது, காங்கிரசின் எதேச்சாதிகார எண்ணத்தை நிறைவேற்றப் பெரிதும் சாதகமாய் அமைந்தது. மேலும், கழகம் நாட்டு மக்களிடையே ஏற்படுத்திய விடுதலை வேட்கையுணர்ச்சியும், வடநாட்டு ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியும் தேர்தல் நேரத்தில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட பல சுயநல சுயேச்சைகளுக்கு வெற்றியைத் தேடித் தந்தன. வெற்றி பெற்றபின், அந்த சுயேச்சைகளை மிக மலிவாகக் காங்கிரஸ் தன் அணிக்கு இழுத்துக் கொள்வது எளிதாக அமைந்தது. இந்நிலை, காங்கிரசை எவரும் எப்போதும் எதிர்க்கவே முடியாது என்ற எண்ணத்தையும், அந்த கட்சியின் ஆட்சியேதான் என்றும் நிலைத்திருக்குமோ என்ற அச்சத்தையும் பெரும்பாலான மக்களுக்கு ஊட்டியது. இந்த அச்சம் நாளடைவில் மெய்யான ஜனநாயகம் உருவாவதற்குப் பெருந் தடையாக இருக்குமே என்ற கவலையில் கழகம் தேர்தலில் ஈடுபடுவது என்ற முடிவினை மேற்கொண்டு, இதுவரை தான் இயங்கி வந்த நிலையில் ஒரு மாற்றத்தைக் கண்டுள்ளது.

சுயநிர்ணய உரிமை வேண்டும்

இந்திய அரசியல் சட்டம் உரிமை வழங்கும் சாசனமாக அமையாமல், பெரிதும் உரிமையை மறுத்து, வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு அரண் செய்யும் சட்டத் தொகுப்பாக உள்ளது இந்திய யூனியனில் பிணைக்கப்பட்டிருக்கும் எந்த மாநிலமும் வெள்ளையர் வெளியேறியபோது இந்திய யூனியன் என்னும் அமைப்பில் இணைவதற்கான விருப்பு வெறுப்பைத் தெரிவித்துக் கொள்ள வாய்ப்பே பெறவில்லை. அடுத்து யூனியன் அமைப்பிலிருந்து ஏதாவதொரு மாநிலம் பிரிந்து செல்ல விரும்பினால், பிரிந்து செல்லும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. ஏனைய மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் சம்மதித்தால்தான் பிரிந்து செல்ல முடியும் என்ற விதியினை அரசியல் அமைப்பு ஏற்படுத்திக் கொண்டுள்ளது. எனவே, அரசியல் அமைப்பில் செய்யப்பட வேண்டிய முதல் மாற்றம், எந்த ஒரு மாநிலமும் எப்போது வேண்டுமானாலும் இந்திய யூனியனிலிருந்து பிரிந்து சென்று தனித்து இயங்கும் உரிமையை தானே பெற்றிருக்க வழி செய்வதுதான்.

அரசியல் சமத்துவம் வேண்டும்!

அடுத்து, இன்று இந்திய யூனியனில் மாநிலங்கள். மக்கள் அடிப்படையில் பிரிக்கப்படாமல், பெரும்பாலும் மொழி கலாச்சார அடிப்படையிலேயே பிரிக்கப்பட்டுள்ளன. ஆனால், மக்கள் சபையில் பிரதிநிதித்துவம் மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளது. இந்த அநீதியின் விளைவாகப் பெரிய மாநிலங்களாக விளங்கக்கூடிய வகையில் எண்ணிக்கையில் பெருத்துள்ள சில இனத்தவர், சிறிய மாநிலங்களாக அமைந்துள்ள வேறு இனத்தவர்மீது ஆதிக்கம் செலுத்த இடமேற்படுகிறது நடைமுறையும் அப்படியே உள்ளது. அரசியல் சமத்துவம் இல்லாத ஆட்சியில் ஒரு சாரார் ஆதிக்கக்காரர்களாயும் பிறிதொரு சாரார் அடிமைகளாயும்தான் இருக்க முடியுமே தவிர, எல்லா மக்களும் சுதந்திரமும் சமத்துவமும் பெற்றவர்களாக இருக்க முடியாது. எனவே, மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும் பெரியதோ, சிறியதோ, ஒரே அளவு பிரதிநிதித்துவ உரிமை அளிக்கப்படுதல் வேண்டும்.

மத்திய ஆட்சி அதிகாரங்களுக்கு வரம்பு வேண்டும்

அடுத்து, இன்றைய அமைப்பில் அதிகாரங்களும் வருவாய்களும் மத்திய ஆட்சிக்கே பெரிதும் அளிக்கப்பட்டுள்ளன. மாநில ஆட்சியில் வருவாய் பெருக வழியின்றியும் சாதாரண பிரச்னைகளில் கூட முடிவெடுக்க முடியாமலும், உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மாநிலங்களின் அதிகார வரம்பும் வரி விதிப்பு உரிமைகளும் வெகுவாக அதிகரித்து, மத்திய ஆட்சியின் அதிகாரங்களுக்கும் வரி விதிப்பு உரிமைகளுக்கும் வரம்பு கட்டப்படுதல் வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது.

தொழில்கள் தேசீய மயமாக வேண்டும்!

தொழில் துறையில் இன்று நிலவும் தனியார் ஆதிக்கம் நாட்டு மக்கள் அனைவருடைய நலன்களுக்கும் நல்வாழ்வுக்கும் பெருங் கேடாக அமைந்துள்ளது. உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் தேசிய மயமாக்கப்படும் அந்த நாள்தான். நாட்டு மக்களின் துயர் துடைக்கும் நாளாக அமையும் எனக் கழகம் கருதுகிறது. இந்த இலட்சியத்தை நிறைவேற்ற வாயளவோடன்றி மனப்பூர்வமாகப் பாடுபடும் அரசே மக்கள் நல அரசாங்கமாகத் திகழ முடியும். ஐரோப்பா, அமெரிக்கா போன்று, பெரும் அளவில் தொழில் மயமாகாத இன்றைய நிலையில், இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவது மிகவும் எளிதாகும். தனியார் இன்னும் பிரவேசிக்காத தொழில் துறைகள் ஏராளமாக உள்ளன. அந்தத் துறைகளில் அரசு உடனடியாகக் கவனம் செலுத்துவதும், கூடவே படிப்படியாக ஏற்கனவே உள்ள துறைகளையும் தேசீய மயமாக்குவதும், இலட்சிய வெற்றியைக் கொடுக்கும். அத்துடன், அன்னிய முதலாளிகளின் இலாபத்தை உயர்ந்த பட்சம் கட்டுப்படுத்தி. அதை இந்நாட்டிலேயே பரவலாக முதலீடு செய்ய முழு மூச்சுடன் முயற்சிக்கப்படும்.

ஐந்தாண்டு திட்ட அநீதி ஒழியவேண்டும்!

இந்தியாவின் அபிவிருத்திக்கென்று மத்திய சர்க்கார் தீட்டியுள்ள ஐந்தாண்டுத் திட்டங்கள் பெரிதும் வடநாட்டின் வளத்தைப் பெருக்கவும், வடவரின் வாழ்வு ஒன்றினையே நோக்கமாகக் கொண்டும் தீட்டப்பட்டுள்ளன எனக் கழகம் கருதுகிறது. இத்திட்டங்களின் மூலம் நீர்ப்பாசன, மின்சார உற்பத்தி ஆகிய துறைகளில் மிகப் பெரும்பாலான திட்டங்கள் வடநாட்டிலேயே இடம் பெற்றுவிட்டன. மற்றும், அரசே தொடங்கும் பெரும் கனரகத் தொழில்களும், தனியார் வசமுள்ள பெருந் தொழில்களுக்கான உதவியும் ஊக்கமும் வடவருக்கே வழங்கப்பட்டுள்ளன. திராவிடம் முழுக்க முழுக்கப் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பதை எவரும் இனி மறுக்கவோ மறைக்கவோ இயலாது. எடுத்துக்காட்டாக, சேலம் பகுதிகளில் வளமான இரும்புக் கனிகள் மிகுந்து இருந்தும், இரும்பு, உருக்குத் தொழில்கள் தெற்கே உறுதியாகத் தொடங்கக் கூடாது என்ற எண்ணத்தையே டில்லிப் பீடம் செயல்படுத்தி வருகிறது. சேலம் பகுதிகளில் பாக்சைட்' என்னும் கனிப்பொருளும் மிகுதியாகக் கிடைக்கிறது. இவ்வாறு பெரும் கனரகத் தொழில்களுக்கான வளங்கள் ஐயப்பாட்டிற்கு இடமில்லாத வகையில் பெருகியிருந்தும், இவைகளை அடிப்படையாக வைத்துத் தொழில் திட்டங்கள் வகுக்காமலிருக்கும் போக்கில் ஏற்படும் பெரும் மாற்றம் ஒன்றே தான். தென்னாட்டவரின் பொருளாதாரத்தை வளப்படுத்தும்.

நெய்வேலித் திட்டம் போன்ற ஓரிரு உருப்படியான திட்டங்கள்கூட மத்திய நிர்வாகத்தில் உரிய வேகத்தில் வளராமல், ஆமை வேகத்தில் நகர்ந்து காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றன. திட்டங்களை நிறைவேற்றும் முழுப் பொறுப்பையும் அந்தந்த மாநில ஆட்சிகளே ஏற்று நடத்தினால்தான், திட்டங்கள் ஒழுங்குற, உரிய காலத்தில் நிறைவேறி, மக்களுக்குப் பயன்தரத் தொடங்கும்.

அதிகபட்ச ஊதியத்திற்கு வரம்பு

குறைந்தபட்ச ஊதியம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் நூறும், அதிகபட்ச ஊதியத்திற்கும் குறைந்தபட்ச ஊதியத்திற்குமிடையே உள்ள விகிதம் பன்னிரண்டு மடங்கு எனவும் அமையும் சமுதாயத்தைக் காண்பதற்கான வகையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும். நாடு முழுவதும் தொழில் மயமாக்குவதற்கு முயன்றாலொழிய முன்னேற்றத்திற்கு வேறு வழியில்லை. நாட்டின் ஒரு பகுதி புறக்கணிக்கப்பட்டு, ஒரு பகுதியில் மட்டும் முன்னேற்றம் ஏற்பட்டால் இது சாத்தியமாகாது. வேலையில்லாத் திண்டாட்டமும் ஒரு பகுதியில் குறைந்து. மற்றொரு பகுதியில் பயங்கரமாகப் பெருகியும்தான் காணப்படும்.

நிலச் சீர்திருத்தம்

காங்கிரஸ் ஆட்சி தயங்கித் தயங்கிக் கொண்டுவரும் பல்வேறு நிலச் சட்டங்களும்

நல்லாட்சி காண்போம்! ★

தேர்தல் அறிக்கை

சமூகத்தில் நிலவும் நல்லுறவுகளைக் கெடுத்துப் புதிய குழப்பங்களை ஏற்படுத்தவே துணை புரிந்துள்ளனர். நில உடைமைக்கு வரம்பு கட்டும் சட்டத்தைத் துணிந்தும் திட்டவட்டமாகவும் நிறைவேற்றுவதொன்றே குழப்பங்கள் நீங்கவும் உணவு உற்பத்தி பெருகவும், சமூக நீதி நிலைநாட்டப்படவும் உதவும்.

வியசாய முன்னேற்றம்

அடுத்து. விவசாயத் துறையில் கூட்டுறவு இயக்கம் மிக அதிகமான அளவில் விரிவடைய வேண்டும். கால்நடைப் பண்ணை, பால் பண்ணை, கோழிப் பண்ணை, விற்பனைச் சங்கங்கள் ஆகிய துறைகளிலும் கடன் உதவி தருவதிலும் கூட்டுறவு இயக்கம் பெருமளவில் பரவிப் பணிபுரிந்தால், நடு . மனிதர்களின் கொள்ளை இலாபக் கொடுமைகளிலிருந்து உழவர்கள் விடுபட்டு உழைப்பின் முழுப் பலனையும் பெற்று உணவு உற்பத்தியில் நல்ல உற்சாகம் காட்டுவர்.

மீன் உற்பத்தி

நம் மாநிலத்தில் பரந்த கடல் சூழ்ந்திருந்தும், மீன் பிடிக்கும் தொழில் மிகக் கேவலமான நிலையில் பயனற்று நசித்து வருகிறது. அத்தொழில் இன்னும் புராதன முறைகளிலேயே நடைபெற்று வருகிறது. மீன் பிடிக்கும் மோட்டார்ப் படகுகளும் வேறு வகையான நூதனக் கருவிகளும் இத்துறையில் புகுத்தப்பட்டால், மீனவர் வாழ்வு மலர்வது மட்டுமேயன்றி, நாட்டு மக்கள் அனைவர்க்கும் மலிவாகவும் ஏராளமாகவும் மீன் கிடைக்கும். சத்தான உணவுப் பொருளான மீன் ஏராளமாகக் கிடைக்கச் செய்ய இதுவே வழியாகும்.

கல்வி

அனைவருக்கும் பத்தாவது வகுப்புவரை (செகண்டரி கட்டம் வரை) இலவசக் கல்வியை அளிப்பதென்பது நமது நாட்டின் கல்வி வளர்ச்சியின் மிக முக்கியமானதொரு கட்டமாகும். விரும்பினால், இதை நிறைவேற்ற மார்க்கம் உண்டு. காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்காகவே உருவாக்கப்பட்ட பல பயனற்ற திட்டங்களுக்காக ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய்கள் விரையமாகிக் கொண்டு வருகின்றது. போலீஸ் இலாகாவில், ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு ஒரு முயற்சியும் இல்லாவிட்டாலும், மந்திரிகளின் பாதுகாப்புக்கும் ஆர்ப்பாட்ட ஆரவார அலங்காரங்களுக்கும் போலீஸ் இலாகாவின் பெயரால் பல கோடி ரூபாய்கள் விரையமாகிக் கொண்டு வருகின்றது. இது போன்று விரையமாகும் பொருளை வைத்துக் கொண்டு பத்தாவது வகுப்புவரை இலவசக் கல்வி அனைவர்க்கும் அளிக்க முடியும்.

அடுத்து. கட்சி, அரசியல், மத. வகுப்பு உணர்ச்சிகள் திணிக்கப்படாததும் அறிவு வளர்ச்சி ஒன்றையே நோக்கமாகக் கொண்டதுமான கல்வி தான் மெய்யான பயன்படும் கல்வியாகும். பெண்கள், சிறு குழந்தைகள், ஊமைகள். செவிடர்கள், குருடர்கள் ஆகியோருக்கும் அவரவர்களுக்குரிய முறையில் கல்வி . அளிக்கும் வசதிகள் விரிவாக்கப்பட வேண்டும். விஞ்ஞான, தொழில் நுணுக்கக் கல்வி நிலையங்கள் தேவைக்கேற்பப் பெருகவேண்டும்.

தாய் மொழியில் போதனை

கல்வி பல கட்டங்களிலும் தாய் மொழியிலேயே அளிக்கப்படல் வேண்டும். கல்விப் பணி புரியும் ஆசிரியர்களின் — அதிலும் ஆரம்ப ஆசிரியர்களின் நிலை உயர்த்தப்படாமல் கல்வியின் தரம் உயருமென்று எதிர்பார்ப்பது வெறும் பகற்கனவே ஆகும்.

இந்தித் திணிப்பு

கல்வித் துறையில் இந்தி மொழிவெறி புகுந்து அட்டகாசம் புரிந்துகொண்டிருக்கிறது. உலகத் தொடர்புக்கும், விஞ்ஞான, தொழில் நுணுக்க, தத்துவ, வரலாற்றுப் பொருளாதார அறிவு பெறவும், ஆங்கிலம் இன்றியமையாததொன்று. ஆங்கில மொழி பயிற்றுவிப்பதில் அதிக கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். தாய் மொழி அறிவு மிகுந்து விளங்க அதற்கு உரிய இடம் ஒதுக்கப்படல் வேண்டும்

மற்றபடி, இந்தித் திணிப்பு ஒரு சாராரின் அரசியல் ஆதிக்க வெறியினையே பிரதிபலிக்கிறது. அதற்கு இடமளிப்பது பெருந் தீமை பயக்கும். திராவிட மக்களின் மொழி, கலை, நாகரிகம், வரலாறு ஆகிய துறைகளில் ஆராய்ச்சி நடத்தி, உண்மை நிலைகளைத் துலக்குவதற்கென்றே ஒரு தனித் திராவிட ஆராய்ச்சிப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

சமவேலைக்குச் சம ஊதியம்

மற்றும், அரசின் நிர்வாகத்தில் பணி புரிவோர்களிடையே இன்று பெரும் அநீதி ஒன்று நிலவுகிறது. ஒரே பணியில் இருப்பினும் மத்திய அரசில் பணி புரிவோர்க்கு ஓரளவு ஊதியமும் மாநில அரசில் பணி புரிவோர்க்கு மிகக் குறைந்த ஊதியமும் அளிக்கப்படும் அநீதி ஒழிக்கப்பட்டு, ஒரே பணி புரிவோர்க்கு, எந்த அரசிலாயினும், நிம்மதியான வாழ்க்கை நடத்துவதற்கேற்ற ஒரே அளவு ஊதியம் அளிக்கப்படுதல் வேண்டும்.

அடிப்படைச் சம்பளமாக்க வேண்டும்!

ஏதோ நெருக்கடியான சில நேரங்களில் மட்டுமேதான் பஞ்சப்படி தருவது முறை. யுத்த காலத்தில் விலைவாசிகள் திடீரென்று உயர்ந்ததால் பஞ்சப்படி தரப்பட்டது யுத்தம் முடிந்து பன்னிரண்டு ஆண்டுகளாகியும் விலைவாசிகள் இறங்கவில்லை. இந்த நிலையில் இன்னும் பஞ்சப்படி தரும் முறை வெறும் கேலிக் கூத்தாகவே உள்ளது. எனவே, பஞ்சப்படி என்பதை சம்பளத்தோடு சேர்த்து, முழுவதையும் அடிப்படைச் சம்பளமாகவே பாவித்து அளிப்பதே முறையாகும்.

கிராம ஊழியர்

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு புறம் ஏராளமான பொறுப்புகளும் வேலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருப்பதும், மற்றொரு புறம் அவைகளை ஒழுங்குற நிறைவேற்ற வசதிகளும் உரிய ஊதியமும் தரப்படாத நிலை நிலவுவதும் அநீதி என்பதோடன்றி, நாட்டிற்குப் பல்வேறு வகையான இழப்புகளும் நேரிடுகின்றன. கிராம உத்தியோகஸ்தர்களின் நிலை தெளிவாக்கப்படுவதுடன், வேலைகளுக்கும் பொறுப்புகளுக்கும் ஏற்ற ஊதியமும் வசதியும் அளித்தல் அவசியமாகிறது.

கடல் கடந்த தமிழர்கள்!

இலங்கை, பர்மா, மலாயா போன்ற நாடுகளில் பிழைக்கச் சென்றுள்ள தமிழ் மக்களுள் அந்தந்த நாடுகளில் குடிமக்களாகப் பதிவு செய்து கொண்டவர்கள் நீங்கலாக, தாய்நாடு திரும்ப விரும்பும் மற்ற அனைவரையும் அழைத்து, அவர்களுக்கான வாழ்க்கைப் பாதுகாப்பைத் தேடித்தர வேண்டும். தமிழர்கள் நிறைந்துள்ள வெளி நாடுகளில் தமிழர்களே தூதுவர்களாக நியமிக்கப்படுதல் வேண்டும்.

இராணுவச் செலவு வெட்டப்பட வேண்டும்!

இராணுவத்திற்கென்று இந்திய அரசு, தனது வருவாயில் பாதிக்கும் மேலாகப் பொருளைச் செலவிடுவது தேவையற்றதாகும். இராணுவச் செலவைக் குறைத்து, அந்தப் பொருளை இதர அபிவிருத்தித் திட்டங்களுக்குச் செலவிடுவதே முறையாகும்.

தொழிலாளர்

தொழிலாளர்கள் நீதியும் நிம்மதியும் பெற வேண்டும் என்பதுதான் கழகத்தின் நோக்கம். 'சக்திக்கு ஏற்றபடி உழைப்பு; தேவைக்கு ஏற்றபடி வசதி' என்ற நிலைமை ஏற்பட வேண்டும். தொழிலாள

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

உதய சூரியன் கண்டு 'குமுதம்'!

சென்ற தேர்தல், தேர்தலுக்குப் பின்னால் சுவையாயிருந்ததே தவிர, முன்னால் இருக்கவில்லை; தேர்தல் நடைபெற்று முடிந்து, பெட்டியை உடைத்துச் சீட்டுகளை எண்ணத் தொடங்கிய பிறகே, வாக்காளரின் குதூகலமும் உடைத்துக் கொண்டு புறப்பட்டது. மன்னாதி மன்னரெல்லாம் சின்னம் சிறிய நபர்களிடம் தோற்ற விந்தையைக் காணக் காண, ஆர்ப்பாட்டம் செய்த தலைவரெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்த அதிசயத்தைக் கேட்கக் கேட்க வாக்காளருடைய கர்வம் கட்டுக் கடங்காமல் பீறிட்டது. ஜனநாயகம் என்ற சொல்லின் பொருள் புலப்பட்டது.

...... இந்தத் தடவை தேர்தல் தேதிக்குப் பல தேதிகள் முன்னதாகவே அவருக்கு நடையில் மிடுக்கும், விவாதத்தில் விருப்பும் ஏற்பட்டு விட்டன. குறிப்பாக, தமிழ்நாட்டு வாக்காளர் இம் முறை தேர்தல்களில் தனிச் சுவையைக் காண்பதில் வியப்பில்லை.

பரபரப்பைத் தூண்டிவிட்டதில் முதல் பங்கு திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உண்டு.

தி. மு. க. இத்தனை நாள்வரை ஓர் அரைகுறைக் கட்சியாக இருந்து வந்ததே தவிர, முழுமையுறவில்லை. அரசியல் பிரசினைகளைக் காட்டிலும் சமூகப் பிரசினைகளில்தான் அதற்கு அதிக அக்கறை. பேச்சு மேடையிலும், நாடக அரங்கிலும், வெள்ளித் திரையிலும் அது முன்னேறிய வேகம் கலாசார உலகத்தின் கவனத்தை ஓரளவு கவர்ந்திருந்தது.

அரசியல் உலகத்தை அது எவ்வளவு தூரம் கவர்ந்திருக்கிறது என்பதை அளவெடுக்க, இந்தத் தேர்தல் துணை செய்யும்.

—'குமுதம்' (10—2—57)



அன்புள்ள பொன்முடி,

தி. மு. கழகம் பல மாத முயற்சிக்குப் பிறகு முன்பு சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் தனது முதல் மாநில மாநாட்டைக் கூட்டியது உனக்கு நினைவிருக்கும். அதே இடத்தில்தான் சென்ற 10-ம் தேதியன்று நமது சிறப்பு மாநாடும் நடந்தேறியது. ஆனால் முதல் மாநில மாநாட்டில் இருந்த மக்கள் திரள், சில நாட்கள் அறிவிப்புடன் மட்டுமே நடத்தப்பட்ட இந்த மாநாட்டிலும் இருந்தது என்றால் நீ ஆச்சரியப்படுவாய். அன்பு நண்ப; மாற்றுக் கட்சிக்காரர் நிச்சயம் மருளத்தான் செய்வர்! குறுகிய இந்த இடைக் காலத்திற்குள் எவ்வளவு வளர்ச்சி என்று நினைத்து அவர்கள் நிச்சயம் வயிறு எறியத்தான் செய்வர்!

அருமை நண்பா! ஆயிரக் கணக்கானவர் முன்னிலையில் அன்றைய தினம் நமது பொதுச் செயலாளர் கழகத்தின் தேர்தல் அறிக்கையை ஒலி பரப்பி, கழகத்தின் வரலாற்றிலே அழியாப் புகழ் சேர்த்தார்.

அன்று அறிஞர் அண்ணா அவர்கள் அய்யாவின் சீற்றம் குறித்து அருமையான விளக்கம் தந்தார்கள்.

"பெரியாரைக் காமராசருக்குத் தெரியாது. சில நாளைக்கு முன்புகூட பெரியார் காங்கிரசைப் பற்றி என்ன கூறியிருக்கிறார்? காங்கிரஸ் முன்பு கழுதையாக இருந்தது; இந்தத் தேர்தலின் போது பன்றியாகியிருக்கிறது; இனி அது கட்டெறும்பாகி விடும்—என்று பேசியிருக்கிறார். இவ்வளவையும் கூறிவிட்டு, இருந்தாலும் காமராசருக்கு ஓட்டுப் போடுங்கள் என்று சொல்லுகிறார். இதற்கு அவர் காங்கிரசை ஆதரிக்கிறார் என்று பொருள்?

திராவிடர் அணி இன்று இரு கிளைகளாக இருந்து கொண்டு காங்கிரசைத்தாக்குகிறது அதிலே ஒரு கிளையான தி. மு. கழகம் காங்கிரசிற்கு வெளியே இருந்து கொண்டு அதைத் தாக்குகிறது. ஆனால் திராவிடர் கழகமோ காங்கிரசிற்கு உள்ளேயே இருந்து கொண்டு காங்கிரசைத் தாக்குகிறது. அவ்வளவு தான் வித்தியாசம்! அதனால்தான் நான் பெரியார் அவர்கள் நம்மை எதிர்ப்பதுபற்றித் துளியும் கவலைப்படவில்லை!"

அருமைத் தோழா! அண்ணா எடுத்துக் கூறிய அந்த அந்தரங்க உண்மையைத் தெரிந்து கொள்ளாத காங்கிரஸ் முகாமைப் பற்றிப் பரிதாபப் படுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும் நம்மால்!

அடுத்த கடிதத்தில் விபரமாக எழுதுகிறேன்.

இங்ஙனம்,
உன் அன்புத் தோழன்



காலையில் தலைநகரை வலம் வந்த மாபெரும் ஊர்வலம். அதில் துணைப் பொதுச் செயலாளரும், பேராசிரியர் அன்பழகனும் கலந்து கொண்டனர்!



தூத்துக்குடித் தங்கம் கே.வி. கே. சாமி அரங்கில் சிறப்புமாநாடு பல்லாயிரவர் முன்னே தனது தேர்தல் அறிக்கையை ஒலி பரப்பிற்று!

உதய சூரியன் சின்னம் தாங்கிய கொடிகள்; உற்சாகமான முகங்கள்—வரவிருக்கும் வெற்றிக்கு நல்ல அறிகுறியாய் விளங்கிற்று!



பார்க்கப் பதினாயிரம் கண் வேண்டுமென்பார்களே; அது இந்தக் கூட்டத்தைப் பார்ப்பதற்குத்தான்!
(படம்: வெள்ளி வீதி சாமுவேல்.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வெள்ளி 15-2-57 சென்னை

ஜெமினி பிடிக்கும் 'காக்காய்!'

கெய்க்வார் மகாராஜா
பரோடா மகாராஜா
மகிசாதால் மகாராஜா
பிக்கானீர் மகாராஜா
ஜக்கம்மன்பூர் ராஜா
டெஹ்ரிகார்வால் ராஜா
சாண்டிலா நவாப்
மூர்ஷிதாபாத் நவாப்
நாஜோல் ராணி
மகா ராஜாதி ராஜ அஜய் சிங்

—இத்தனை ராஜாக்களும், நவாபுகளும் மக்கள் ஆட்சியை நிறுவிவிட்டதாக மார்தட்டிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே இந்த உபகண்டமெங்கும் அபேட்சகர்களாக நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்!

இது வடநாட்டிலே!

தென்னாட்டிலே ராஜா சர் முத்தையா செட்டியாருக்கு ஆதரவு தருகிறது, காங்கிரஸ்!

அன்று ஏழையர் முகாமாய்; பாட்டாளிகளின் நண்பனாய் விளங்கிய காங்கிரஸ் இன்று பண மூட்டைகளிடம் சரண் புகுந்திருக்கிறது!

இந்த ராஜாக்கள் பட்டியலிலேதான் இன்னொரு ராஜாவும் சேர்ந்திருக்கிறார். அவர்தான் 'பட உலக ராஜா' என்று கருதப்படும் ஜெமினி அதிபர் வாசனாகும்!

அவர் ஆளும் கட்சியைக் 'காக்காய்' பிடிக்க தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு தேர்தல் பிரச்சாரப் படத்தைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்; அதில் சில 'காக்காய்'களும் நடித்திருக்கின்றன!

அந்தத் துண்டுப் படம் காங்கிரஸ் நாட்டுக்குச் செய்திருப்பதாகச் சொல்லப்படும் தொண்டினையோ; அதன் பலாபலன்களையோ தெளிவு படுத்துவதாக இருந்தால்; அந்தக் கட்சியின் தேர்தல் பிரகடனத்தைப் பிரபலப்படுத்துவதாயிருந்தால் நாம் கவலைப்பட்டிருக்க மாட்டோம்!

ஆனால் அந்தப் படமெடுக்க முன் வந்தவர்களோ வராக வடிவமெடுத்து; சாக்கடையிலே விழுந்து புரளுவதோடல்லாமல்; மாற்றுக்கட்சிகள்மீது அதை வாரி இறைக்க முற்பட்டிருப்பதுதான் பொது மக்கள் காறி உமிழத்தக்க கொடுஞ் செயலாய் இருக்கிறது!

குழந்தையும் கை கொட்டிச் சிரிக்கும் குயுக்தி வாதங்கள்-பைத்தியக்காரக் கொள்கைகள்-குறைமதி கொண்ட கருத்துக்கள் அந்தச் சாக்கடைச் சேற்றிலே நெளிந்து கொண்டிருக்கும் புழுக்களாகக் காட்சி தருவதை நிறைமதியாளர் எவரும் மறுப்பதற்கில்லை!

நாடாண்ட கட்சிக்குத்தான் மக்கள் ஓட்டுப்போட வேண்டுமாம்! சோஷலிஸ்ட் வேஷம் போட்டுக் கொண்டிருந்த ஒரு நபர் இதிலே தனது கொள்கைகளுக்குச் 'சாந்தி' காணும் விதத்திலே இந்தக் கருத்துரையைச் சொல்கிறார்!

அந்தோ, பரிதாபம்! நாடாண்டு; அனுபவம் கொண்டவர்கள் மட்டுமே ஆட்சிக்கு வரவேண்டுமெனில் இந்தத் தேசிய அனுபவப் புலிகளைவிட வெள்ளைக்காரன் எந்த விதத்திலே நாடாளும் அனுபவத்தில் குறைவுபட்டவனாக இருந்தான்?

நாடாளும் அனுபவம் மட்டுமே தேர்தலுக்கு நிற்பதில் ஒரு முக்கிய குறிக்கோளாக இருந்தால்; இந்தக் காங்கிரஸ் வீரர்கள் அந்த அனுபவம் இல்லாத மாற்றுக் கட்சிக்காரர்களிடமிருந்து ஏன் அபேட்சா பத்திரத்தை வாங்கிக் கொள்கிறார்கள்?

—மக்கள் மன்றம் இவ்விதக் கேள்விகளை எழுப்பாது என்ற இறுமாப்பிலே படத் தயாரிப்பாளர்கள் தங்களை 'அறை குடங்கள்'; 'சதைப் பிண்டங்கள்'—என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்!

அதுமட்டுமா? அதிலே வரும் கதாபாத்திரம் ஒருவர் 'காளைமாடு தான் நமது தெய்வம்'—என்கிறார்!

காளைமாடு தெய்வமாம்! பாவம்; அவர்கள் படித்த எந்த சாஸ்திரத்தில் இப்படி எழுதியிருக்கிறதோ தெரியவில்லை! இந்துமதக் குப்பைகள் கூட பசுவைத்தான் தெய்வமென்று கூறுகிறதே தவிர; காளையைக் கடவுளென்று கூறவில்லை! இந்த வாசன் புராணமோ வசை புராணமாக மாறி புதுப் புதுத் தெய்வங்களையே தயாரித்திருக்கிறது!

அப்படியே பசுவை—ஒரு மாட்டினைத் தெய்வமாகக் கொண்டாலும் அது குறித்து அவர்கள் தலைவர் பண்டித நேருதான் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா?

"என்னைப் பொறுத்தவரையில் குதிரையும் ஒன்றுதான்; பசுவும் ஒன்றுதான்! விவசாய காரியங்களுக்காக கால் நடைகள் மிகவும் உபயோகமாக இருப்பினும் அதற்காக அவைகளை வந்தித்து; வழிபட நான் தயாராயில்லை!" (பிப்ரவரி 6, அலகாபாத் சொற்பொழிவு)

—ஆனால் அவரது தொண்டரடிப்பொடி ஆழ்வார்களோ, தலைவரின் சொற்பொழிவையே தலைகுப்புற மாற்றி; கருத்துக் கொலை புரிந்திருக்கிறார்கள்!

முன்னொரு சமயம் காளைச் சின்னத்தைக் குறிப்பிட்டு காமராசர் பேசினார், மாட்டுப் பெட்டிக்கு ஓட்டளித்தால் அது பால் மிகக் கொடுக்கும் என்று! பாவம்; இவர்களும் காமராசர் குறிப்பிடுகின்ற அந்தக் 'காளை மாட்டுப் பால்' குடிக்கிறவர்களோ என்னவோ; அதன் மீது பக்திப் பிரவாக மெடுத்துப் புதிய பாசுரம் பாடியிருக்கிறார்கள்!

படத்தின் ஒரு பகுதியிலே ஒற்றைக் காளைமாடு ஒன்று தி. மு. கழகத் தோழர்மீது பாயவருகிறதாம்; அதுகண்டு அந்த நமது தோழர் பயந்து ஓடி விடுகிறாராம்!

ஒற்றைக் காளை-அதைத் தடுக்க முடியவில்லையாம் தி. மு. கழகத் தோழனுக்கு!

அய்யா, படாதிபதியே! தி. மு. கழகத் தோழனை விரட்டுவதற்கு உங்கள் பெட்டியிலே உள்ள இன்னொரு காளைமாடு எங்கே போயிற்று?

இரு காளைகள் உண்டே; அதன் இன்னொரு ஜோடி மாடு எங்கே போயிற்று?

காமராசர் சொன்னபடி அந்தக் காளை பால் கொடுப்பதற்குப் போயிருக்கிறதா? அல்லது அந்தக் காளையை தமிழ்நாடு காங்கிரசிலிருந்து பிரிந்த காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி ஓட்டிச் சென்று விட்டதா?

நாம் மட்டும் கேட்கவில்லை, நண்பர்களே! நாடு கேட்கிறது! கைக்குழந்தை கிறுக்கி வைத்த கோடு போல் காட்சிதரும் அந்தப் படத்தைப்பார்த்துவிட்டு!

காளையைப் பார்த்துப் பயப்படுகிறானும் தி. மு. க. தோழன், அந்த ஒற்றைக் காளையை அடக்கி ஒடுக்க வலுவிழந்து; புறமுதுகிடுகிறதாம் தி. மு. கழகம்!

காளையைக் கண்டு ஓடாமல்; அதை அடக்குவது ஒன்று மட்டுமே எதிர்க்கட்சியின் பலம் என இந்தப் படமெடுத்தோர் கருதுவார்களேயானால், அவர்களுக்குத் தெளிவுபடுத்த ஆசைப்படுகிறோம், எங்கள் தி. மு. கழகத்தின் பிரச்சாரப் படம் முன்பே வந்து விட்டது படாதிபதியாரே; பன்னெடு நாட்களுக்கு முன்பாகவே வெளிவந்து விட்டது!

அதன் பெயர்தான் 'தாய்க்குப் பின் தாரம்'! அந்தப் படத்திலே அன்புகாட்டிய **தந்தை;** அறிவுரை கூறிய **அய்யா** வஞ்சகம் கொண்டோர் ஏவிவிட்ட காளைமாட்டினால் வீழ்த்தப்படுகிறார்! இதைக் கேட்டு பொங்கி எழுந்த மகன்—புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் வடிவிலே பாய்ந்து சென்று காளையின் கொழுப்படக்கி; கழுத்தையொடித்து; வாகைமாலை சூடுகிறான்! அய்யா ஜெமினியாரே; தனக்கென ஒரு திடமான கொள்கையில்லா 'சாந்தி'யாரே; அதில் பங்கு கொண்ட 'காசுக்கு வீங்கி'யாரே!

இந்தப் படத்தின்மூலம் நீவிர் எம்மீது ஏவுகிற அந்த ஒற்றைக்காளை புரட்சி நடிகர் வடிவில் நாங்கள் முன்பு கொன்று குவித்த காளைபோக மீதமுள்ள காளைதானா? அப்படியானால் இந்தக் காளைக்கும் விரைவில் கல்லறை எழுப்புவதோடன்றி; அதை ஏவிவிடும் வடநாட்டு மூலபலத்தையும்முறியடிப்போம். இன்றில்லாவிடில் நாளை;நாளையில்லையேல் நாளை மறுநாள் என்பதைத் திண்ணமாகக் கூறிக்காட்ட ஆசைப்படுகிறோம்! ★

காதலுக்குக் கண்ணில்லை

தொடர் நாடகம்

★ தில்லை வில்லாளன் எம்.ஏ., ★

(காட்சி-29: தொடர்ச்சி)

(நகைமுகத்தான் மன்னன் கொல்லப்பட்ட கதையைக் கூறுகிறுன்.)

நகைமுகத்தான்: மன்னன் முனகும் சப்தம் கேட்டது—அறையை நோக்கி ஓடி உள்ளே எட்டிப் பார்த்தேன்—என்ன ஆச்சரியம்—ராணி, மன்னனைத் தன் வாளால் குத்தினுள்—இரத்தக் குளத்தில் மிதந்து கொண்டிருந்தான் மன்னன். நான் உள்ளே சென்று அந்த வாளை எடுத்துக் கொண்டு ஓடோடிவிட்டேன்.

ப: தம்பி, விவேகம் நிரம்பியவன் நீ—இனி ஆளவந்தான் சாகமாட்டான்—உம், புறப்படுவோம்.

காட்சி--30

(இரவு—சிறைக்கு வெளியில் சிறைக் காவலாளிகள் வெட்டுப் புலி ஆடுகிருர்கள்.)

மூ. கா: புலி பாயுது—அடக்கு.

இ. கா: கட்டு, கட்டு—பார்ப்போம்.

மூ. கா: ஆடும், புலியும் ஒண்ணுயிடுமா? அந்த ஆடு சாயுதா இல்லையா பார்.

மூ. கா: உஸ், சப்தம் போடாதே—தூங்கும் கைதி விழித்துக்கொள்ளப் போகிருன், பாவம்.

இ. கா: நாளைக்கு எப்பொழுதுமே எழுந்திருக்காமல் தூங்குவான்.

மூ. கா: மன்னனைக் கொன்று விட்டானே—பெரிய கொலைகாரனுகத்தானே யிருப்பான்!

இ. கா: கொடியவனைக் கொல்வதற்கு, பெரிய கொலைகாரனுகத்தான் இருக்கனும்.

மூ. கா: அவனுக்கு என்ன வயதிருக்கும்?

இ. கா: கொலை செய்வதற்கு ஏற்ற வயதுதான் — ஆனுல் தப்பித்துக் கொள்ளக்கூடிய அறிவுள்ள வயதுதானில்லை.

மூ. கா: ராணியே மன்னித்து விடலாம்னு சொன்னுங்களாமே!

இ. கா: மயங்கியே விழுந்து விட்டாளாம், தீர்ப்பைக் கேட்டு!

மூ. கா: ராணி, எங்கும் நிறைந்த கடவுள்தான் போலிருக்கு! என்னடான்னு, கொலை நடந்த இடத்திலேயும் இருந்து பிடித்துக் கொடுத்தாங்க—இப்போ விட்டுடச் சொல்லியும் நீதிதேவரை வேண்டி யிருக்காங்க.

மூ. கா: விடிந்தால் தொங்கப் போகிறன் தூக்கிலே.

இ. கா: உம், அவனும் போன ராஜாவோட மகன்னு சொல்ருனும்—விஷத்தைக் குடித்து விட்டாலும் விடுவான்.

மூ. கா: தூக்கிலே தொங்குவதைவிட விஷங் குடிப்பது எவ்வளவோ மேல்— இது என்ன விஷம்?

இ. கா: குடித்தால், சாகடிக்கிற சாதாரண விஷம்.

மூ. கா: விஷமின்னு, என்னு அது?

இ. கா: தண்ணி மாதிரி ஒரு பானம். ஏன், அவன் குடிச்சுது போக மிச்சமிருந்தா—குடிக்கிருயா?

மூ. கா: ஏ, அப்பா, நான் குடிக்கமாட்டேன் — அவன் குடிக்க வில்லேன்னு...

இ. கா: காலையில் கழுமரத்திற்கு இழுத்துச் செல்வார்கள். அங்கே கொன்றுவிடுவார்கள்.

மூ. கா: விஷத்தைக் குடித்து விட்டால்....

இ. கா: அவன் இங்கேயே இறந்து விடுவான்!

மூ. கா: அவனுக்குக் கொடுத்திருக்கிற தண்டனை இரண்டும் இரண்டுதான்!

(அப்போது, யாரோ வெளியில் கதவைத் தட்டுகிருர்கள்.)

மூ. கா: யாரது?

இ. கா: (எட்டிப் பார்த்து) அழகான பொம்பளை—ஆனுல் முகத்தை மூடியிருக்கு!

(ராணி வருகிருள்.)

பொ: நீங்கள்தான் இன்றைய காவலர்களா?

இ. கா: ஆம்.

பொ: இருட்டறைச் சிறையில் இருக்கும் கைதியை தனிமையில் நான் பார்க்கவேண்டும்.

(கையிலிருந்த மோதிரத்தை நீட்டுகிருள் — அது ராணியின் மோதிரம் என்பதை உணர்ந்து, அவர்கள் மரியாதை செலுத்துகிருர்கள்.)

பொ: நீங்கள் வெளியே காவலிருங்கள்.

(அவர்கள் வெளியில் செல்கின்றனர்.)

காட்சி--31

(சிறையில் ஒரு வைக்கோற் படுக்கையில் ஆளவந்தான் தூங்குகிருன். அவன் எதிரில் ஒரு கோப்பையில் நஞ்சிருக்கிறது. அதற்கு எதிரில் ஒரு விளக்கு மாட்டப்பட்டிருக்கிறது ராணி உள்ளே நுழைகிருள்—முகமூடியைக் கழற்றுகிருள்.)

பொன் மேனியாள்: (முதலில் விஷத்தைப்பார்த்து) இதோ, என் அமைதிக்கு வழிகாட்டும்அமுதம்! உலக இன்பவீட்டின் திறவுகோல்! (பிறகு விளக்கை கழற்றி, ஆளவந்தான் முகத்தைப் பார்த்து) எவ்வளவு அமைதியாகத் தூங்குகிருர்! குற்றம் புரிந்தாலல்லவோ, அவர் உறக்கமின்றி இரவெல்லாம் படுத்துப் புரள்வார்! இந்தஉடையிலே அவர் வெளியேறிவிடலாம்–ஆம், அவர் தப்பித்துப் போகும்பொழுது என்னைத் தூற்ற மாட்டார், போற்ருவிட்டாலும்! (அவன் முகத்தருகே சென்று) நான் முத்தமிடட்டுமா? என் முத்தம், இவரை எரித்துச் சாம்பலாக்கி விடாதா? இவர் தப்பிக்க வேண்டும்—நீதி தேவர் நல்ல அறிவாளி — மூன்று நாட்கள் தவணை தந்தாரே! (மீண்டும் விஷத்திடம் போய்) விஷத்தைக் குடிக்கிறேன். துக்கமும், துயரமும், பிணியும், மூப்பும் வந்து தொல்லை தருவதற்கு முன் சாவது மேல்தானே! நான்சாவதற்குரிய வயதடையவில்லை; ஆனுல் சாகத்தான் வேண்டும். ஏன் சாகவேண்டும்? அவர் இன்று தப்பித்துக்கொண்டால், நானும் இவருடன் போய்விட முடியாதா? அவர் நிரபராதி–தப்பிக்கிருர்; நான் குற்றவாளியாயிற்றே! நான் சாகவே வேண்டும். அவர் என்னைக் காதலிக்கவில்லை. ஆகவேசாகிறேன். அவர் என்னை அன்போடு அணைத்து, ஆறுதல் முத்தம் ஒன்றே ஒன்று தந்து விட்டால் ஆனந்தமாகச் சாவேன். அவர் தரமாட்டார். ஆம், அவர் மனதை நான் அறியமுடியவில்லை. ஆம், உலகத்துப் பெண்கள் எல்லோருமே, காதலர்கள் அவர்களை விட்டுப் பிரிகிறவரை அவர்கள் மனதை அறிய முடியவில்லை. (கோப்பையை எடுக்கிருள்). நஞ்சே, கடைசியாக காதலுக்கு தரும் காணிக்கை நீ தான்! (குடிக்கிருள்.)

(ஆளவந்தான் விழிக்கிருன்.)

பொ: தங்களிடம் மன்னிப்பு கேட்க நான் வரவில்லை மன்னிப்பு நிலையைக் கடந்துவிட்டேன். நான் நீதி அவையினரிடம் உண்மையைக் கூறினேன். அவர்கள் நம்பவில்லை. நான் தங்களைக் காப்பாற்ற கண்டுபிடித்த கதைஇதுஎன்றனர். பெண்ணிடத்துள்ள கருணை உள்ளம் இப்படிப் பட்டதாம் எனப் பரிதாபப்பட்டனர். வேறுசிலர் கணவனை இழந்ததால், என் சிந்தனையும் சிதைந்துவிட்டது என்றனர். அரசாங்க மருத்துவரை அழைத்துவரும்படிக் கூறினர். அவர்களோ பலர்; நான் ஒருத்தி! என் வேண்டுகோளை மறுத்துவிட்டனர். நானே ராணி–ஆனுல் என் காதலருக்கு, காதலைத் தர முடியாவிட்டாலும், மன்னிப்பையும் தர முடியவில்லை. மரணத்தையே தந்துவிட்டேன். தாங்கள், இந்த உடைகளை அணிந்து கொண்டு உடனே புறப்படுங்கள். இதோ, முத்திரை மோதிரம்; இதைக் காட்டினுல் யாரும் தடை செய்யமாட்டார்கள். இரத்தக் கரைபட்ட கரம்தான்; ஏற்கனவே கழுவிவிட்டேன். பெற்றுக் கொள்ளுங்கள்.

(ஆளவந்தான் மோதிரத்தை வாங்கி முத்தமிடுகிருன்.)

ஆள: மகிழ்ச்சி, மகாராணியாரே!

பொ: உடனே புறப்படுங்கள்; குதிரைகள் காத்திருக்கின்றன வெளியில்!

ஆள: இன்றிரவேயா?

பொ: இப்பொழுதே!

ஆள: (சிரித்தபடி) அவர்கள் வெகு விரைவில் வந்துவிடுவார்கள்.

பொ: யார்?

ஆள: என்னைத் தூக்கு மரத்திற்கு அழைத்துச் செல்லும் தூதுவர்கள்.

பொ: என் துயரைப் பெருக்காதீர்கள். வருத்தியது போதும். ஒரு பிணம்படுத்தும்பாடே போதும்; மற்ருெரு பிணமும் விழ வேண்டாம்!

ஆள: நான் இங்கிருந்து எப்படியும் தப்ப முடியும்!

பொ: அன்பரே, முடியாது; ராணிதான் நான்... ஆனுலும் இந்நாட்டு சாதாரண பெண்ணுக்குள்ள உரிமைகூட எனக்கில்லை. அவர்கள் தங்கள் உயிரை விடிந்ததும் குடித்து விடுவார்கள். தப்பித்துவிடுங்கள்.

ஆள: தப்பிக்கிறேன், உன்னுலல்ல; சாவால்! அறவாழியை விட்டு என்ன; உலகை விட்டே!

பொ: ஐயோ, தங்களின் மரணத்தைக் காண சகிக்காது

விண்மீன்கள் உதிர்ந்துவிடும். தண்ணிலவு நெருப்பைக் கக்கும். கதிரவன் தலை மறைவாகவே போய்விடுவான்.

ஆள : நான் நிச்சயமாக போக மாட்டேன்.

பொ : உங்களுக்குத்தெரியாது, இந்நாட்டு நீதிதேவர் முடிவிற்குள்ள சக்தி; என்னால் கூட தடுத்து நிறுத்தவே முடியாது. நான் செய்த பாதகம் போதும்; தொடர்ந்து பாதகம் செய்ய வேண்டுமா? ஏற்கனவே, என் கரத்தில் வந்திட்ட இரத்தம் போதாதா? இன்னுமா வேண்டும்?

ஆள : (அவள் கரத்தைப் பிடித்துக் கொண்டு) அன்பே, உனக்கு நான் சாகத் தகுதியில்லாதவனா?

பொ : என்ன, எனக்காகத் தாங்கள் சாவதா? தாங்கள் எனக்காகச் சாவதா? தாங்கள் தூய்மையின் உருவம்—நான் குற்றத்தின் வடிவம்!

ஆள : குற்றம்! காதலுக்காக செலுத்தியது குற்றம்! இல்லை! இல்லை! இல்லவே இல்லை! (மண்டியிடுகிறான்.) பொன்னே, கண்ணே, என் காதல் தந்த காவியச் சித்திரம் நீ! எனக்காகவே தோன்றியவள்-நான் உனக்காகவே பிறந்தவன்—நடந்தவைகளை மறந்துவிடுவோம்; இனி நடப்பவைகளை எண்ணுவோம். காதலிக்கிறேன் என்று உன் வாய்திறந்து கூறு!

பொ : எனக்கு அந்த உரிமையில்லை. காதலை இரத்தக் கறையால் களங்கப்படுத்தி விட்டேன்.

ஆள : கொலையை நீ செய்யவில்லை. உன் மனதிலே புகுந்த வெறியெனும் பேய் செய்தது!

பொ : பேய்களின் பூமி நரகமென்பர், புராணக்காரர்கள். அந்த நரகமாகவே இந்த உலகம் போய்விடுமா?

ஆள : கண்ணே, இந்த உலகை சொர்க்கமாக்கிக் கொள்ளவும் முடியுமே, நம்மால்.

பொ : இந்த உலகம் சொர்க்கமோ, நரகமோ இன்னும் சிறிது நேரம்வரை அனுபவிக்கப் போகிறோம்!

ஆள : நீ எதையும் எண்ணி மனங் குழம்ப வேண்டாம். நான்தான் கொலைபுரியவே அறவாழி வந்தேன். என் மனம் என்றும் கொலையைப் பற்றி எண்ணிக் கிடந்தது. என் கரந்தான் மறுத்துவிட்டது. உன் மனமோ என்றும் காதலின் உறைவிடமாயிருந்தது. கரந்தான் கொலை செய்தது. ஆகவே, உன் மீது குற்றமில்லை. உன்மீது கொண்ட காதல் தீராத காதல், கண்ணே!

(முத்தமிடத் தாவுகிறான்)

பொ : (தள்ளி நின்று) தங்கள் இதயமும், உதடும் பளிங்கு போன்றவை. தூய்மையானது. என் உள்ளமும், உதடும் குற்றம் புரிந்தவை. என்னைக் காதலிப்பது உண்மையானால் என்னைத் தொடாதீர்கள். என்னைத் தொட்டால், ஒவ்வொரு நிமிடமும், விஷப் புழுவாக மாறி உங்கள் ஆயுளை சரித்து ஒழித்துவிடும். உடனே தப்பிப்போய் விடுங்கள். ஆனால் என்னைப்பற்றி நினைக்கும் பொழுது, இந்த உலகில் எந்தப் பொருளிடமும் காட்டாத அன்பைக் காட்டிய பெண் என்று நினையுங்கள். காதலுக்குப் பெரியதொரு தியாகம் செய்ய முயன்று தோற்றுப்போன பெண் என்று நினையுங்கள்.

(மணியடிக்கிறது.)

ஆள : விடிந்ததை அறிவிக்கும் மணி ஒலிக்கிறது.

பொ : ஐயோ, அழைத்துச் செல்ல ஆட்கள்வரும் காலடியோசை கேட்கிறது-ஐயோ இதோ உடைகள்; அணிந்து கொள்ளுங்கள்; தப்பிவிடுங்கள்.

(ராணி மயங்குகிறாள்.)

ஆள : கண்ணே, நான் சாகப் பயப்படவில்லை. இந்த நஞ்சினைக் குடித்து, அவர்கள் வருவதற்கு முன்னே சாகிறேன்.

பொ : அந்தோ!

ஆள : வா கண்ணே, எனக்குக் கடைசி முத்தம் தந்துவிடு. (கோப்பையை எடுக்கிறான்.) ஐயோ, இது காலியாக இருக்கிறதே! (அதை வீசியெறிந்துவிட்டு) இந்தக் கொடிய நாட்டில் நஞ்சுக்குக்கூட பஞ்சமாம்!

பொ : பஞ்சமில்லை; ஒருவருக்குத்தான் நஞ்சிருந்தது.

ஆள : ஐயையோ, நீ குடிக்கவில்லையே, நஞ்சை?

பொ : என் உயிரில் பாதியை அது குடித்துவிட்டது!

ஆள : எது?

பொ : இங்கேயிருந்த கோப்பை நஞ்சு!

ஆள : கண்ணே, காதலனுக்கு இப்போதுதான் முதல் துரோகம் செய்துவிட்டாய்; எனக்காக ஒரு துளிகூட நஞ்சை மிஞ்ச விடவில்லையே!

பொ : நீங்கள் சாகப் பிறந்தவரல்ல—நான் குற்றம் புரிந்தேன். ஆகவே சாகிறேன்!

ஆள : கண்ணே, எனக்காகக் கொஞ்ச நேரம் இரு—இருவரும் ஒன்றாகக் கைகோர்த்துச் சாவோம்!

பொ : நீங்கள் சாகக் கூடாது. நீங்கள் உயிருடனிருக்க வேண்டும். இந்த உலகில் எவ்வளவோ பெண்கள் உங்களைக் காதலிப்பார்கள். ஆனால் உங்களுக்காக யாரும் கொலை செய்யமாட்டார்கள்!

ஆள : கண்ணே, உன்னைமட்டுமே இந்த உலகில் நான் காதலிக்கிறேன்.

பொ : காதலுக்காக நீங்கள் சாகக் கூடாது.

ஆள : மடிந்தால்தான் இருவரும் ஒரே பிணப் படுக்கையில் கிடக்கலாம்.

பொ : பிணப் படுக்கை, மிகச் சிறிய மணப் படுக்கை. இருவருக்கு இடம் இருக்காது!

ஆள : இருக்கு மிடத்தையே, நாம் பகிர்ந்து கொள்வோம்.

பொ : அங்கே மணமக்களுக்குப் போடும் ரோசா மலர் மாலை யிருக்காது.

ஆள : ரோசா இதழ்களைவிட மென்மையான உன் உதடுகள் எனக்குப் போதும்.

பொ : இல்லை. கண்ணாளா, பிணவறை மிகவும் இருட்டாக இருக்கும். நான் முதலில் போய் விளக்கேற்றி, விழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறேன்.

(ஆளவந்தான் முகத்தை இரு கரத்தாலும் ஏந்திடுகிறாள்.)

கண்ணாளா, என் உடலெங்கும் உருக்குலைக்கும் நஞ்சினை இனி அழிக்க முடியாது. ஆம், எரியும் நெருப்பு, அதனை அவிக்கும் நீர், அறநாட்டில் எங்குமில்லை—என் உடலில் பாய்ந்த நஞ்சை எடுக்க முடிந்தவருக்கு அறநாட்டையே தருவேன் ஆனால் யாரால் முடியும்? அதுவும் இந்த நேரத்தில்! என் இன்ப நினைவுகள் வேறு என்னை இழுக்கின்றன. நாம் இருவரும் குதிரைமீதேறி அழகாபுரிக்குத் தப்பிப்போவதுபோலத் தெரிகிறது. தந்தை வரவேற்கிறார். நாம் அந்தப்புரம் நுழைகிறோம். ஆடலழகிகள் ஆடுகிறார்கள்—பாடலில் வல்லவர்கள் பாடுகிறார்கள். ஐயோ...

ஆள : அவையெல்லாம் நினைவின் நிழல்கள் கண்ணே, நீ எதற்கும் அஞ்சவேண்டாம்- நான் துணை வருவேன்.

பொ : சாவே, ஏன் தயங்குகிறாய்? அன்று அரசர் மாளிகையில் வைத்த விருந்து, பிண விருந்து-இன்று மண விருந்து-மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள். என்னை எரிக்கிறது. ஐயோ, என் உடல் பற்றி எரிகிறது. கண்ணாளா, எனக்கு தாகத்திற்கு நீர் - அல்லது இன்னும் ஒரு கோப்பை நஞ்சு வேண்டும்! இறப்பின் துடி துடிப்புகளை உணராமல் சாகிறேன். சாவு

கடைசிப் பக்கம்

எழுத்தாணி

வி. சோமநாதன்; குளித்தலை.

(?) தி. மு. கழகத்தவர்களுக்கு பேசுவதைத் தவிர வேறு என்ன தெரியும்?

சட்டசபை செல்வதற்கு வேறு என்ன தெரிய வேண்டும்?

எல். நாராயணன்; குளச்சல்.

(?) காமராசர் பெரியவர் என்பதை மறுக்கிறீர்களா?

அவரைவிடப் பெரியது தமிழ்நாடு என்பதை உறுதிப்படுத்துகிறோம்!

ஆர். கலியமூர்த்தி; எருதுபாளையம்.

(?) மந்திரிகள் தோற்ருல் கவர்னர் பதவி கிடைக்கும்; தி. மு. கழகத்தவர் தோற்ருல்?

நிச்சயம் அடுத்த முறை வெற்றி கிடைக்கும்!

வி. எஸ். கே. மூர்த்தி; நாகை.

(?) காமராசர் பாக்கெட்டிலே பணமே இருக்காதாமே?

ஆனல் அவரைச் சுற்றியிருப்போர் 'பாக்கெட்டிலும்,' இரும்புப் பெட்டியிலும் பணத்தைத் தவிர வேறு ஒன்றுமே இருக்காதே!

தேர்தல் அறிக்கை...

✻ 3-ம் பக்கத் தொடர்ச்சி

ருக்குக் குடியிருப்பு வசதி, வைத்திய வசதி, ஓய்வு நேர வசதி ஆகியவை போதுமான அளவுக்கு எல்லாத் துறைகளிலும் ஏற்பட வேண்டும். கடந்த பத்தாண்டுகால ஆட்சியிலே தென்னுட்டு மக்களுக்கு நிம்மதியான வாழ்வளிக்கத் தவறியிருக்கும் காங்கிரஸ் ஆட்சியினர், தென்னுட்டுத் தொழிலாளரின் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவு செய்யக்கூடிய உத்தரவாதம் அளிக்கவில்லை. அடுத்தடுத்துப் போடும் ஐந்தாண்டுத் திட்டங்களிலே வட நாட்டுத் தொழிலாளரின் வளர்ச்சியும் பாதுகாப்பும் வளர்கின்ற அளவுக்கு தென்னுட்டுத் தொழிலாளரின் நிலை முன்னேறவில்லை. இந்த அநீதியை வன்மையாகக் கண்டிப்பதுடன், தென்னுட்டுத் தொழிலாளரின் நிலை உயர ஆவன செய்யவும் தன்னுல் முடியும் என்று உத்தரவாதமளிக்கிறது. இலாபத்தில் பங்கு கோருவதென்பது தொழிலாளர் உரிமைகளின் ஒரு கூறு மட்டுமே ஒழிய, முழு உரிமையையும் எடுத்துக் கொள்வதாகி விடாது. ஆகவே, தொழிற்சாலையின் அடிப்படை மூலதனத்திலும் நிர்வாகத்திலும் தொழிலாளரின் உரிமைப் பயணம் தொடங்க முயற்சி மேற் கொள்ளப்படும்.

கைத்தறிக்குப் பாதுகாப்பு

தென்னுட்டில் கைத்தறித் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்து வரும் இலட்சக்கணக்கான கைத்தறி நெசவாளருக்குத் தக்க பாதுகாப்புத் தேடித் தர வேண்டியது அவசியமாகும். கரை போட்ட வேஷ்டிகளையும் சேலைகளையும் கைத்தறிக்கே ஒதுக்கிக் கொடுத்தால் தான் கைத்தறியாளரின் அவதி நீங்க வழிபிறக்கும். ஏற்றுமதியை அதிகரிக்கத் தேவையான வழிகளையெல்லாம் அரசாங்கம் ஆராய வேண்டும். இப்பொழுதுள்ள சூழ்நிலையில் விசைத்தறியைப் புகுத்துவது தனிப்பட்ட சில முதலாளிகளை வளர்ப்பதற்கும், ஏழை நெசவாளர்களைச் சீரழிப்பதற்கும் காரணமாக இருக்குமாதலால் விசைத்தறி இப்பொழுது எவ்வகையிலும் புகுத்தப்படக் கூடாது.

விற்பனை வரி

வியாபாரத் துறையில் நாணயமும் நேர்மையும், உண்மையும் மானமும் காப்பாற்ற முடியாத அளவுக்குப் பலகட்ட விற்பனை வரிகளும், அவை பற்றிய சட்ட விதிகளும் வியாபாரிகளைப் பெரிதும் வருத்தி வருகின்றன. வியாபாரிகள் நேர்மையாக வியாபாரம் நடத்த, அரசாங்கத்தின் தேவையற்ற கட்டுப்பாடு விதிகள் அகற்றப்பட வேண்டும். விற்பனை வரிகளைப் பல கட்டங்களில் வசூலிப்பதைவிட ஒரு முனையில் விதித்து, வியாபாரிகளும், பொது மக்களும் தாங்கக்கூடிய விதத்தில் வசூலிப்பதே ஏற்றது.

தமிழ்நாடு

தேவிகுளம், பீர்மேடு, திருத்தணி போன்ற தமிழ்ப்பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்படுவதற்கும், சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயரிடப்படுவதற்கும் முயற்சிக்கப்படும். இரு மொழி, மும்மொழி, மாநில அமைப்பு ஏற்பாட்டினை எதிர்த்துப் போராடும்.

தென்னுட்டில் பூதத்துவ ஆராய்ச்சி

தெற்கே, உருவான வகையில் பூதத்துவ ஆராய்ச்சியினை அரசு மனப்பூர்வமாக மேற்கொண்டால், புதிய பல வளங்கள் தட்டுப்படும்; தொழில்களுக்கான வாய்ப்புகளும் பெருகும்.

வேண்டுகோள்

மேற்கண்ட வகைகளுக்காக கழகம் பாடுபடுவதுடன், சமுதாயத்தில் நிலவும் சாதிமுறைக் கேடுகளை ஒழித்துச் சாதிகளற்ற ஒரு சமுதாயத்தைக் காண்பதற்கும், திராவிட நாட்டின் அரசியல் சுதந்திரத்தை உருவாக்கவும், சமதர்மக் குடியரசைக் காணவும் தொடர்ந்து போராடக் கழகம் உறுதி பூண்டுள்ளது.

இன்றையத் தென்னகத்தின் அரசியல் சூழ்நிலையில், திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் (சென்னை) மாநில ஆட்சி மன்றத்தில் ஒரு வலுவுள்ள எதிர்க்கட்சியாக அமர்வதற்கேற்ற தகுதியும் திறமையும், வாய்ப்பும் வசதியும் பெற்றிருக்கிறது. கழகத்தைச் சேர்ந்த அறிவும் ஆற்றலும், நாணயமும் நேர்மையும், உண்மையும் உறுதியும், நாட்டின் நலன்கள் குறித்து வாதிடும் வல்லமையும், தேவைகளை வற்புறுத்திக் கேட்கும் தன்மையும் பெற்ற செயல் வீரர்கள் பலர் பல்வேறு தொகுதிகளிலும் போட்டியிடுகிருர்கள். நாடு வாழவும் நலிவு போகவும், உண்மையான மக்களாட்சி மலரவும் சமதர்மம் தழைக்கவும், திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்களை ஆதரித்து, அவர்களைச் சட்ட மன்றத்திற்கும் மக்கள் சபைக்கும் அனுப்பிவைக்குமாறு, வாக்காளர்களே, உங்கள் அனைவரையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிருேம்.

தலைமைக் கழகம் (தி. மு. க.)

மு. கருணநிதி

சுற்றுப்பயணம்

பிப்ர-	18:	வெள்ளக்கோயில் (நாமக்கல் தொகுதி)
,,	19:	ஈரோடு
,,	21:	சமயபுரம் (திருச்சி பார்லிமெண்ட் தொகுதி) எதுமலை (லால்குடி தொகுதி)
,,	22:	முசிரி தொகுதி
,,	23:	கணியூர் (உடுமலைத் தொகுதி)
,,	24:	சேலம்
,,	25:	மாலை 5 மணி, வண்டிப் பாளையம் (கடலூர்) இரவு 7 மணி, சென்னப்ப நாயக்கன் பாளையம் (கடலூர்) இரவு 8-30 மணி, நெல்லிக்குப்பம் இரவு 10 மணி, ராம்பாக்கம் (வளவனூர் தொகுதி)
,,	26:	காட்டுமன்னுர்குடி
,,	27:	திருக்கோஷ்டியூர் தொகுதி திருவாடானை தொகுதி
மார்ச்	1:	வாணியம்பாடி

'முரசொலி'
போன் எண் :
85225

காதலுக்குக்கண் .....

(தொடர்ச்சி)

நம்மைப் பிரிக்கப் பார்க்கிறது; நீங்கள் வருந்தாதீர்கள்.

ஆள : வருந்தவில்லை; சாவை கூவியழைக்கிறேன்! கண்ணே, காதலும், சாவும்நமக்கு இரண்டு இணை பிரியாத தோழர்கள். ஆகவே காதலித்தோம் இருவரும்; சாவோம் இருவரும் சேர்ந்து.

பொ : இந்த உலகத்துப் பெண்களில் எவரும் செய்யாத குற்றத்தை நான் செய்தேன்.

ஆள : காதலுக்காக குற்றம் செய்தவர்கள், குற்றவாளிகளே அல்ல!

(இருவரும் முத்தமிடுகின்றனர். அவள் உதட்டில் வடிந்த நஞ்சை அவன் உட்கொள்கிருன். சாய்கிருன்: நீதி தேவர், நீதிபாலர், பழிதீர்த்தான், நீலவானத்தான், நகை முகத்தான், குயில் குரலாள்—இன்னும் அரசாங்கப் பிரதானியர் பலரும் வருகின்றனர். ராணி கண் விழிக்கிருள்.)

பொ : நீதி தேவரே, நீதி வென்றது; தோற்றது. ஆமாம்; குற்றவாளி நான் சாகிறேன்—இது வெற்றி! ஆனல் என் அன்பர் செத்துவிட்டார். இது நீதிக்குத் தோல்வி.

(ராணி மிரள மிரள விழிக்கிருள். குயில் குரலாள் அவள் அருகில் போய் அழுகிருள்.)

பொ : குயில், செத்துக்கொண்டேயிருக்கும் உன் அண்ணிக்கு ஒரு உதவி: உன்காதலன் யாரம்மா ?

(கு. குரலாள் நகை முகத்தானைக் காட்டுகிருள். ராணி அழைக்கிருள் அவனை. இருவர் கரத்தையும் சேர்த்து வைத்தாள்.)

பொ : குயில் இனி இந்நாட்டு ராணி நீ! உன் காதல் நிறைவேறிவிட்டது. காதல் சாகாதது என்று உலகிற்குக் காட்டுங்கள்.

(எல்லோரும் அழுகின்றனர்.)

பொ: அறநாட்டு அதிபதிகளே! உங்கள் ராணியின் கடைசி வேண்டுகோள்; எங்கள் இருவரையும் ஒரு சமாதியில் அடக்கம் செய்யுங்கள். அதன்மீது 'ராணியின் காதல் வென்றது' என்று எழுதி வையுங்கள்.

(ராணி சாய்கிருள். எல்லோரும் கண்ணீர் வடிக்கின்றனர். அவள் முகத்தின்மீது குயில் குரலாள் கருப்புத் துணியை இழுத்து மூடுகிருள்.)

(முற்றும்.)

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட்ரோடு சென்னை-6. தமிழ்நாடு.